**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.670/2025
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
( Court

| | | | |
|---|---|---|---|
| Name | லெட்சுமணன் | -- | |
| Father's Name | இராதாகிருஷ்ணன் | Calling | கொத்தனார் |
| Village | பூவாணி | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

**Accused Present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பூவாணி சங்கரப்பநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 இராமகிருஷ்ணனை தெரியாது. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாலை 06.30 மணிக்கு ஜோதி பெட்ரோல் பல்க்கிற்கு நான் பெட்ரோல் போட சென்றபோது சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் கீழே விழுந்து கிடந்தார். அப்போது அங்கு வந்த 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரை திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள். என்ன காரணத்திற்காக அவர் கீழே கிடந்தார் என்றும் எனக்கு தெரியாது. வேறு விபரம் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த அண்ணன். அவர் சுமார் 10 ஆண்டுகளாக ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறார். போலிஸ் விசாரணையில் 01.09.2023ம் தேதி மாலை 06.40 மணியளவில் ஜோதி பெட்ரோல் பல்க்கில் நான் பெட்ரோல் போடச் சென்றபோது அடையாளம் தெரியாத ஒரு நபர் தென்வடல் ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை நடந்து கடந்து சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி TN849975 என்ற பதிவெண் உள்ள ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி நபர் மீது மோதிவிட்டார் என்றும் நானும், இராமகிருஷ்ணன், நல்லமுத்து ஆகியோர் சேர்ந்து அவரை தூக்கிப்பார்த்தபோது அவருக்குப் பின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு வலது காதில் இருந்து இரத்தம்

வந்தது என்றும், உடனடியாக 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம் என்றும், இது சம்மந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்ககோரி இராமகிருஷ்ணன் ஒரு புகார் மனு கொடுத்தார் என்றும் பின்னர் மேல்சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த மேற்படி அடையாளம் தெரியாத நபர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி 04.09.2023ம் தேதி இறந்துவிட்டதாக தெரிந்துகொண்டேன் என்றும் இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த அண்ணன் என்பதால் அவரை காப்பற்ற வேண்டி நடந்த சம்பவம் குறித்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of December 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2025.12.19 16:36:46 -0400

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**